
# மலேரியா நோயும்,

## அதற்கான சிகிச்சைகளும்



வைத்திய கலாநிதி -க. தங்கத்தாமரைச்செல்வன்

அஞ்சலா வெளியீடு

[illegible]

[illegible]
B. A. M. (Cey) [illegible]
Regd. No. [illegible]

[illegible]

[illegible]

# மலேரியா நோயும் அதற்கான சிகிச்சைகளும்




ஆசிரியர்

**டாக்டர் க. தங்கத்தாமரைச் செல்வன்**

**(D. A. M (cey), R. A. M. P (cey))**

டாக்டர் கதிரவேலு ஞபகார்த்த மருத்துவமனை
வல்லைறோட் அச்சுவேலி

அஞ்சலா மருத்துவமனை
முழங்காவில்



அஞ்சலா வெளியீடு.

| | | |
|---|---|---|
| நூல் | - | மலேரியா நோயும் அதற்கான சிகிச்சைகளும் |
| ஆசிரியர் | - | டாக்டர் க. தங்கத்தாமரைச்செல்வன் (D. A. m (Cey), R. A. m. P |
| முதற்பதிப்பு | - | 2002 மாசி |
| மொழி | - | தமிழ் |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | - | சு. பிரதாஸ் |
| அச்சுப்பதிப்பு | - | வாணி கணனிப்பதிப்பகம் |
| வெளியீடு | - | அஞ்சலா வெளியீடு. |

## பவள விழாக்காணும்

யாழ்/இலங்காசித்தஆயுள்வேத மருத்துவக்கல்லூரிக்கும், அக்கல்லூரியில் இதுவரை காலமும் மருத்துவக்கல்வியைக் கற்பித்த விரிவுரையாளர்கள் அனைவருக்கும், இப்போதும் மருத்துவக்கல்வியைக் கற்பித்துக்கொண்டிருக்கின்ற விரிவுரையாளர்கள் அனைவருக்கும், எனது முதற்கண்கள் நன்றியுடன், பவழவிழா ஆண்டிலே இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

அன்புடன்

**Dr.** *க. த. தாமரைச்செல்வன்*

## ஆசிச்செய்தி

**சிவஸ்ரீ சா. நிவீர்த்திக்குருக்கள்**
**கிளிநொச்சி மாவட்ட**
**இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர்**

கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்திய சேவைகள் இணையச் செயலாளரும், முழங்காவில் கிராமத்தில் "அஞ்சலா கிளினிக்" என்ற வைத்திய நிலையத்தை நிறுவி சேவையாற்றி வருகின்ற. இலங்கை ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி D. A. M . பட்டதாரியும் ஆகிய Dr க. தங்கத்தாமரைச்செல்வன். மக்கள் மனங்கவர்ந்த ஓர் வைத்தியர்.

அவர் "மலேரியாவும், அதற்கான சிகிச்சையும்" என்ற நூலை ஆக்கிய முயற்ச்சி, காலத்தின் தேவை உணர்ந்த ஓர் செயற்பாடு. இறைவனால் அருளப்பட்ட ஆயுள்வேதம், சித்தர்களால் மெருகூட்டப்பட்டு உலகெங்கும் சித்த ஆயுள்வேதமாக புகழடையும் இக்காலத்தில், அவ்வழி எம்மக்களும் நல்வாழ்வுவாழ நவீன நோய் அறி முறைகளுடனும், சிகிச்சைகளையும் தந்துள்ள மருத்துவரின் இந்நூல், மக்களுக்கும், மருத்துவர்களுக்கும், பலனுடையது என எண்ணுகிறேன்.

இதுபோல் மேலும் பல நோய்கள் பற்றியும் சுகாதாரம் பேணல், நோய்தடுக்கும் வழி பற்றி எல்லாம் பல நூல்களை ஆக்க, அவருக்கு நீண்ட ஆயுளையும் சாதுர்யத்தையும், நல்க சித்தர்களின் சித்தியும், இறையருளும் கிடைக்க பிரார்த்தித்து, எமது உளமார்ந்த நல்லாசிகளை, டாக்டர். க. தங்கத்தாமரைச்செல்வன் அவர்களுக்கு வழங்கி மகிழ்கின்றோம்.

## வாழ்த்துரை

**வைத்தியகலாநிதி . திருமதி. க. பரமசிவம் J.P**
**D.A.M.S (Ceylon)**
**அதிபர்**
**இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியில் மருத்துவக்கல்வியைக் கற்று D. A.M பட்டத்தைப் பெற்றுக் கொண்டார் டாக்டர் க. தங்கத்தாமரைச் செல்வன் இவர் அச்சுவேலியில் சித்தஆயுள்வேத வைத்தியப் பரம்பரையின் 8 வது தலைமுறை வைத்தியராவார்.

இவர் அச்சுவேலியிலும், தற்போது முழங்காவிலிலும் மருத்துவ சேவையை மக்களிற்குச் சிறப்பாக ஆற்றிக் கொண்டிருப்பதோடு, கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுள் வேத வைத்திய சேவைகள் இணையததின் செயலாளராகவும், சேவையாற்றிக் கொண்டிருப்பது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

இந்நூலாசிரியர் எனது மாணவன் என்பதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். கல்லூரிவாழ்வில் இனிமையான சுபாவமும், கலகலப்பாக எல்லோருடனும் பழகும் பண்பும், பொதுச்சேவையும், கல்வியைக் கற்பதில் ஆர்வமும், கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட மாணவர்களில் ஒருவராக இவரைக்கண்டேன். இவர் கல்லூரியில் நடைபெறும் அனைத்து விடயங்களிலும் முன்னின்று செயற்படுவார். குருபக்தியுள்ள மாணவனாகவும் விளங்கினார்.

இவரது முயற்சியினால், காலத்தின்தேவைகருதி வெளியிடப்படும் மலேரியாவும், அதற்கான சிகிச்சைகளும் என்னும் நூல் வெளிவருகின்றது. இந்நூல் மக்கள் அனைவருக்கும் பயனுள்ள ஒரு சிறந்த நூலாகும். எனது மாணவனாகிய டாக்டர் தங்கத்தாமரைச்செல்வன் தனது மருத்துவப்பணியுடன், மேலும் பல பயனுள்ள மருத்துவ நூல்களை வெளியிட்டு சிறப்பான பெருவாழ்வு, பெருமையுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

செ. பத்மநாதன்
தலைவர்,
வவுனியா மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்திய
அபிவிருத்திச்சங்கம்,
சமாதான நீதவான்,
திடீர் மரணவிசாரணை அதிகாரி

# அணிந்துரை

சித்த மருத்துவர் தாமரைச்செல்வன் அவர்களை நான் நான்கு அறிவேன்

இவர் யாழ்ப்பாணம் லங்கா சித்தஆயுள்வேத மருத்துவ கல்லூரி பட்டதாரி ஆவார். தற்போது முழங்காவில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் மக்களுக்கு சிறந்த வைத்தியராக உதவி வருகிறார் உயிர்கொல்லி மலேரியா நோய் பற்றி ஆராச்சி செய்து அந்நோய் ஏற்படுவதற்கான காரணிகள் நோயின் அறிகுறிகள் அதற்கான சிகிச்சை முறைகள் போன்றவற்றை விரிவாக ஓர் நூல் வடிவில் வெளியிடுகின்றார்.

இவரின் இச்சேவையை மனமாரப்பாராட்டுகிறேன் இளம் வயதினரான இவர் எதிர் காலத்தில் சிறந்த ஓர் மருத்துவராக சேவை செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

நன்றி

# முகவுரை



எமது நாட்டிலே எல்லோரிடமும் காணப்படும் ஒரு உபத்திரவமான நோயாக மலேரியா நோய் உள்ளது. வன்னிப் பெருநிலப்பகுதியில் கடந்த ஏழு ஆண்டுகளாக என்னிடம் சிகிச்சைக்கு வந்த நோயாளிகளி அதிகமானோர் மலேரியா நோயாளிகளாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. இப்படி உபத்திரவத்தைக் கொடுக்கக்கூடிய நோயிலிருந்து எமது மக்களைக் காக்கும் பொருட்டு எனது அனுபவம், அறிவு போன்றவற்றிற்கு எட்டியவரையிலும், மேலதிகமாகச் சில மருத்துவ நூல்களிலிருந்தும் தொகுத்து இந்த நூலை உருவாக்கி உள்ளேன்.

இந்நூலில் சிகிச்சை முறைகள் அனைத்தும் சித்த ஆயுள்வேத வைத்திய முறையிலேயே எழுதப்பட்டுள்ளதால் சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கும், வைத்திய மாணவர்களுக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

இந்நூலை நான் எழுதியதற்கான காரணம் மக்கள் அனைவரும் மலேரியா நோயை உணர்ந்து அவற்றிற்கான சிகிச்சைகளை உரிய முறையில் பெற்று சுகதேகிகளாக ஆரோக்கியமாக வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவே எழுத்தியுள்ளேன்.

இந்நூல் வெளியீட்டிற்கு எனக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் தந்ததும் மட்டுமல்லாமல் நான் இந்த நிலமையில் இருப்பதற்குக் காரணமாகிய எனது பேரன்புக்கும், பெரு மதிப்புக்கும், உரிய வைத்திய கலாநிதி இ. தில்லைவாசன் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலுக்கான ஆசிச்செய்தியை வழங்கிய மதிப்புக்குரிய சிவஹரீ சா. நிவர்த்திசாதுக்குருக்கள் ஐயா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலுக்கான வாழ்த்துச்செய்தியை நான் தொலைபேசியில் கேட்டபொழுதும் மிகவும் மகிழ்ச்சியுடன் தொலைநகலில் வாழ்த்துச்செய்தியை அனுப்பி வைத்த எனது குருவும், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியின் அதிபருமாகிய வைத்திய கலாநிதி திருமதி தி. பரமசிவம் J.P அவர்களுக்கும் நன்றியைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து இந்நூலுக்கான அணித்துரையை வழங்கிய மதிப்புக்குரிய மருத்துவர் செ. பத்மநாதன் J.P அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு இந்நூலின் அச்சுப்பதிப்பிற்காக நான் வவுனியா வந்தது முதல் எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் நூலுக்கான ஆலோசனைகளை வழங்கிய எனது நண்பன் வைத்திய கலாநிதி செ. ப. சத்தியநாதன் J.P அவர்களுக்கும், சகோதரி வைத்தியகலாநிதி திருமதி. ச. கிருஷாந்தி அவர்களுக்கும் நான் நன்றி கூறிக் கொள்வதில் பெருமகிழ்சியடைகின்றேன்.

மேலும் இந்நூல் உருவாக்கத்தில் நான் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது எனக்கு தேவையான குறிப்புக்கள் வழங்கி ஒத்துழைப்பு நல்கிய தி. ஜெயராஜா அவர்களுக்கும், எனக்கு என்றும் அறிவுரைகள் வழங்கிவரும் அன்புச்சகோதரர் தாமரைச்செல்வன் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன் இந்நூலுக்கான அட்டைப்படத்தை அழகாக வரைந்த சு. பிரதாஸ் அவர்களுக்கும் வேண்டிய போது தேவையான உதவிகள் நல்கி ஊக்கப்படுத்தி வரும் அன்பின் அம்மா, மனைவி, மகன். க. த. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் என் நன்றிகள். இந்நூலை மிகவும் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய வாணி கணனிப்பதிப்பகத்தினருக்கும் என் அன்பான நன்றிகள். இந் நூல் உருவாக்கத்திற்குச் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் என் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வைத்திய கலாநிதி க. தங்கத்தாமரைச்செல்வன்**
D.A.M(cey), R.A.M.P ((cey)

* *டாக்கடர் கதிரவேலு ஞாபகார்த்த மருத்துவமனை அச்சுவேலி.*

* *அஞ்சலா மருத்துவமனை முழங்காவில்*

## ✣ மலேரியா (விஷமஜ்ரம்) MALARIA

இந்நோய் வயது வேறுபாடின்றி எல்லோரிடமும் ஏற்படக்கூடிய ஒரு நோயாகும். உலகிலேயே வருடம் ஒன்றிற்கு பல கோடிக்கணக்கான மக்களைப் பாதித்தும், இலட்சக்கணக்கான மக்களின் மரணத்திற்கும் காரணமான இந்நோய் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இனங்காணப்பட்டுள்ளது. உலகிலேயே பெரும்பாலான நாடுகளில் இந்நோயை இல்லாதொழிப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும். இன்னமும் முற்றாக ஒழிக்கப்பட முடியவில்லை. எமது நாட்டிலேயும் பெரும்பாலானோரில் இந்நோய் ஏற்படுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

சித்த ஆயுள்வேத வைத்தியத்தை இயற்றிய தன்வந்திரி, அகத்தியர், சுதருதர் போன்ற சித்தர்களும் இந்நோயை இனங்கண்டு இதன் பாதிப்புகளை ஆராய்ந்து இதனை விஷமஜ்ரம் என்று கூறியுள்ளதோடு இது வெளிக் காரணங்களினாலே (ஆகந்துவகாரணம்) ஏற்படுகின்றதென்றும் கூறியிருக்கின்றார்கள்.

ஆகந்துவாகாரணம் என்று கூறும் போது நாம் உட்கொள்ளும் அறுசுவை உணவுவர்க்கங்களின் காரணமில்லாமலே வருகின்ற சுரம் ஆகந்துவசுரம் ஆகும்.

### ✣ மலேரியா நோய்க்கான காரணி:

மலேரியா பிளாஸ்மோடியம் (Plasmodium) என்னும் நுண்ணுயிரினால் ஏற்படுகின்றது. இதில் பலவகைகள் இருக்கின்றன. ஆனால் எமது பிரதேசத்திலே இரண்டு வகைகள் மட்டும் காணப்படுகின்றன.

1) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (Plasmodium Vivax)

2) பிளாஸ்மோடியம் பல்பசிபாரம் (Plasmodium Falciparum)

பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் நுண்ணுயிர்கள் ஈரலில் நீண்டகாலமாக 2 தொடக்கம் 3 வருடங்கள் தங்கியிருந்து பெருக்கமடைந்து பின்பு திரும்பவும் குருதியைச் சென்றடைந்து மலேரியாக் காச்சலை ஏற்படுத்தக்கூடியது.

ஆனால் பிளாஸ் மோடியம் பல்சிபாரம் வகையில் இவ்வியல்பு காணப்படுவதில்லை ஆயினும் இக்கிருமி பல்லாயிரக்கணக்கில் மனிதனின் உடலில் பெருகி செங்குருதிக்கலங்களை பெருமளவில் அழிக்கக்கூடியது.

✣ **நோயருப்பு காலம்** (Incubation Period)

ஒருவருக்கு நுளம்புகுத்தி 10 தொடக்கம் 15 நாட்களுக்கிடையில் மலேரியா நோய் உண்டாகும்.

குறிப்பு :- மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் மாலை 6 மணி தொடக்கம் 11 மணிவரையும், காலை 3 மணி தொடக்கம் 7 மணி வரையும்மான காலப்பகுதியில் மனிதரின் குருதியைக் குடிக்கின்றது.

✣ **மலேரியா நோய் மனிதனுக்கு எவ்வாறு ஏற்படுகின்றது?**

மலேரியா நுளம்பின் மூலம் பரவித் தொற்றக்கூடிய நோய் ஆகும். அனோபிலிஸ் நுளம்பு, வகையைச் சேர்ந்த பெண் நுளம்புகள் மலேரியா நோயாளியின் குருதியை உறிஞ்சும் போது நோயாளியின் குருதியிலுள்ள மலேரியா

ஒட்டுண்ணிகளின் குருதியுடன் சேர்ந்து நுளம்பினுள் செல்லும்.

❀ இதன் தொடர்ச்சியை அடுத்தபக்கத்தில் (4ம் பக்கத்தில்) பார்க்கவும்.

✣ **மலேரியாவில் ஏற்படும் காய்ச்சல் முக்கியமாக 3 நிலையில் காணப்படும்.**

1. குளிர் நிலை

நடுக்கத்தைத் தொடர்ந்து உடல் பூராவும் குளிரும். பல்லுக்கிட்டும், தலையிலிருந்து கால்வரை அசதி தெரியும். வாந்திவரும். தோல் நீலநிறம் போலவும் குளிருவது போலவும் தெரியும். இந்நிலை $^{1}/_{2}$ தொடக்கம்1 மணித்தியாலம்வரை காணப்படும். பின்பு குளிர் குறைவது போலவும் சுரம் ஆரம்பிப்பது போலவும் தெரியும். இந்நிலையில் சிறுவர்களுக்கு வலிப்பு ஏற்படும்.

2. வெப்பநிலை

நாடி படபடத்து மெலிந்துதுடிக்கும். தலையிடி சத்தி தோல் வரண்டு சுரம் 104, 105, 106 வரை கூடிக்காணப்படும். இந்நிலை 1 தொடக்கம் 4 மணிநேரம் வரை காணப்படும்.

3. வியர்வை நிலை

ஒன்று அல்லது பல மணித்தியாலங்கள் தீவிரமாக வியர்க்கும். பின்பு தலையிடி குறையும். தாகம் ஏற்படும். வியர்வை குறையும் பொழுது உடல் நலம் பெறுவதாக நோயாளி உடன் உணருவார். சுரம் சாராரண நிலையிலும் குறைந்து காணப்படும்.

✣ பிளாஸ்மோடியம் வகைகளில் பிளாஸ்மோடியம் பல்சிபாரம்

என்ற நுண்ணங்கி எமது உடலில் சென்றால் மிகவும் அவதானமாக நோயைக் குணமாக்க வேண்டும். இக்கிருமி உடலில் சென்றால் விட்டு விட்டுக் காச்சல் தெரியும். சத்தி, வயிற்றோட்டம், அசதி, தசைகள் உடம்புகள் நோதல்.

3ம் பக்கத் தொடர்ச்சி.

நுளம்பின் உடம்பினுள் சென்ற கிருமிகள் 10 தொடக்கம் 12 நாட்களுக்கு மட்டுமே நுளம்பில் இருக்கும். அதற்குப்பின் நுளம்பு மலேரியா நோய் அற்ற ஒருவருக்கு நோயைக் கொடுக்கும்.

இந்த நுளம்பு மீண்டும் குருதியை உறுஞ்சுவதற்காக நோயற்ற ஒருவரின் உடலில் குத்தும் போது தனது உமிழ்நீரை எமது உடலுக்குள் செலுத்தித்தான் குருதியை உறிஞ்சும். அப்பொழுது அதன் உமிழ்நீரில் இருக்கும் நோயை ஏற்படுத்தக் கூடிய பிளாஸ்மோடியம் என்னும் நுண்ணங்கி எமது குருதியுடன் கலக்கின்றது, இவ்வாறு நுளம்பு குத்திய பின்பு குருதியினுள் சென்ற பிளாஸ்மோடியம் கிருமி அதிகமாக விருத்தி அடைந்து அதனுடைய எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரித்து மலேரியா நோய் உண்டாகும். இக்கிருமிகள் மனிதனின் ஈரலில் உறங்கு நிலையில் இருக்கும். இதனால் நுளம்பு எம்மைக்குத்தாமலே மீண்டும் மலேரியா சுரம் இரத்தம் மாற்றீடு செய்யும் பொழுது மாற்றீடு செய்யும் இரத்தத்தில் பிளாஸ்மோடியம் கிருமி இருந்தால் இரத்தம் ஏற்றப்படுபவர்களுக்கும் மலேரியா ஏற்படும். நாளத்தில் ஊசி ஏற்றும் போது ஊசியை தகுந்த முறையில் தொற்று நீக்காமல் ஏந்தினாலும் பிளாஸ்மோடியம் கிருமி மனித உடலை அடையும்.

பிளாஸ்மோடியம் வைவாக்ஸ், பிளாஸ்மோடியம் பல்சிபாரம் ஆகிய இரண்டு வகையான நுண்ணுயிர்கள் சேர்ந்தும்

ஒருவருக்கும் மலேரியா நோய் ஏற்பட்டால் இதனை கலப்பு தொற்று என்று அழைக்கலாம்.

* 3ம் பக்கத்தைப் பார்த்துவிட்டுத் தொடரவும்.

## மலேரியா நோயாளியில் காணப்படும் குணங்குறிகள்

ஆரம்பத்தில் நடுக்கம் குறைந்த நேரம் காணப்படும். தலையிடி, உணவில் விருப்பமின்மை வாந்தி வருவது போல இருக்கும். குறைந்த நேரம் காணப்படும். குளிர்ந்த நீரில் விருப்பம் இருக்கும். பின்பு நாட்கள் சென்றால் செங்கமாரி, மண்ணீரல் வீக்கம், சிறுவர்களுக்கு வலிப்பு ஏற்படும்.

பிளாஸ்மோடியம் பல்சிபாரத்தின் தீவிரமான நிலையில் காணப்படும் உபத்திரவங்கள், படிப்படியாக மூச்சுக்கஸ்ரம், செங்குருதி சிறுதுணிக்கைகளுடன் பிளாஸ்மோடியம் பல்சிபரம் இணையும், தசையின் கீழ்க்கட்டிகள் ஏற்படும். சலம் கொஞ்சம் கொஞ்சமாகப் போகும். சிறுநீரகம் செயலிழக்கும். சமீபாட்டுக் குழப்பம், ஏற்படும். தீவிரமாக இரத்தக்குறைபாடு காணப்படும். இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும். சுய நினைவற்ற நிலை ஏற்படும் சுவாசப்பை வீங்கும், சுவாசப்பையில் நியூமோனியா சுரம் ஏற்படும். இதனால் பக்ரீரியாக்கள் தாக்கும்.

சலத்தோடு இரத்தம் போகும். நோயாளி நான் சாகப் போகிறேன் என்று நினைத்துப் பயப்படல். மூளைக்காச்சல் போன்ற உபத்திரவங்கள் காணப்படும். மலேரியா நோய் தீவிரமான நிலையில் (anemia) பாண்டு ஏற்படும்.

## மூளை மலேரியா (Cerebral maleria)

இக்காச்சல் பிளாஸ்மோடியம், பல்சிபாரம் நுண்ணுயிர் தொற்றினால் உண்டாகிறது. இது பல்சிபாரம் தொற்றினால்

உண்டாகும் மலேயாவிற்கு தகுந்த சிகிச்சை செய்யாத பட்சத்தில் பாதிப்பாக மூளைமலேரியாக் காச்சல் உண்டாகின்றது. உடனடியாகச் சிகிச்சை அழித்து நோயாளியை மரணத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்.

✣ சித்தஆயுள்வேத வைத்திய நூல்களிலே கூறப்பட்டுள்ள விசம ஜுரத்தின் குறிகுணங்கள்:

தேகமெல்லாம் நொந்து அனல்போல் காய்தல். தலை, முகம், வாய், புருவம் முதலிய இடங்களில் வலி ஏற்படும். உதடும், நாவும் வளவளப்பாக காணப்படும். நித்திரை குறைவாக காணப்படும். சுரம் கூடுதலாகவும், தாகமாகவும், மயக்கமாகவும் காணப்படும். சாதாரண வயிற்றோட்டமும் காணப்படும். நோயாளி வெய்யிலில் இருக்க விரும்புவார். வாந்தியும், வயிற்று பிரட்டலும் ஏற்படும். குளிர் காச்சலுடன் உடல் நடுங்கி காணப்படும். நோய் கூடிய நிலையில் பிதற்றுதல் காணப்படும்.

✣ கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் எழுதிய வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் விசமசுரத்தை ஆகீகசுரம், மாறல்சுரம், ஆகந்துவசுரம் என்கின்ற இந் மூன்று வகைச் சுரங்களையும் (Interminternt Fever) அல்லது (Malaria) என்று கூறியுள்ளார். தினந்தோறும் வருகின்ற சுரமாயின் காலை நேரத்திலும், ஒன்றைவிட்டு ஒருநாள் வருகின்ற சுரமாயின் பகல் 12 மணிக்கு முன்னும் 2 நாள் பூரணமாக சுரமில்லாமல் இருந்து 3 நாள் வருகின்ற சுரமாயின் பகல் 12 மணிக்கு மேலும் காணப்படும். சில சரீங்களுக்கு சுரம் வந்திருக்கும் போது உதடு, காது, மூக்கு முதலியவைகள் நீல நிறமாகவும், நாவெழுறி வறட்சியாகவும் காணப்படும். முதலில் முதுகு முள்ளந்தண்டிலிருந்து குளிர் ஆரம்பித்து தேமெல்லாம் பரவும்.

குளிர் நின்ற பின்பு தேகம் காயும், காய்ந்தடங்கும் சமயம் வியர்வை கூடும். இத்தகைய சுரத்தில் பூரணமாக சுரம் விடாமலேயே அடிக்கடி வியர்வை ஏற்படுவதோடு, சுரம் குறைவதும், சுரம் அதிகரிப்பதுமாக காணப்படும். இதனை (Remittent fever) என்றும் அழைக்கப்படும்.

**✣ விஷம சுரத்தின் கஸ்ர சாத்திய நிலமை**

விஷமசுரம் கண்டவுடன் தகுந்த சிகிச்சை செய்யாதிருந்தால் முதலில் ரசதாதுவிலும், 7 நாளைக்கு மேல் இரத்த தாதுவிலும் 21 நாளைக்கு மேல் மேதோதாதுவிலும், 5 மாதத்திற்கு மேல் அஸ்திதாதுவிலும், 2 வருடத்திற்கு மேல் மச்சை தாதுவிலும், 3 வருடத்திற்கு மேல் சுக்கில தாதுவிலும், பற்றி வியாபிக்கும்.

சில சந்தர்ப்பங்களில் விசம சுரத்தின் வன்மைக்கேற்றவாறு தீவிரமாக தாதுக்களை ஒன்றன்பின் ஒன்றாகக்கெடுத்து கஸ்ரசாத்தியமாகுவதும் உண்டு. மச்சை, சுக்கிலம். இவைகளில் வியாசித்த சுரமானது நோயாளியை கொல்லும். இத்தகைய சுரங்களை (Chronic Malaria) என்றும் கூறப்படும்.

**✣ மலேரியா நோயைக் கண்டுபிடிக்கும் முறை :-**

1. மேலே கூறப்பட்ட முக்கியமான குணங்களிலிருந்து கண்டு பிடிக்கலாம்.

2. நாடித்துடிப்பைக் கொண்டு கண்டு பிடிக்கலாம்.
(சித்த ஆயுள்வேத வைத்திய நாடிப்பரீட்சை மூலம் வாத, பித்த, சிலேத்தும நாடிகளின் தன்மைகளை கொண்டு நிதானிக்கலாம். பூநாடியும் துடிக்கும் வாதநாடியும்

வலுப்பெற்றிருக்கும்.

3. ஆய்வுகூட பரிசோதனை மூலம் மிகவும் நுட்பமாகவும் கிருமிகளின் வகைகளையும் அறியலாம். இரத்தம் ஒரு துளி எடுத்து கண்ணாடிச் சிலைற்றில் பூசி அதனை முறைப்படி (ஜிம்சா சாயம) முறைப்படி சாயமூட்டி நுணுக்குக்காட்டியில் பார்த்தால் செங்குருதிக்கலங்களிலுள்ள நுண்ணுயிர்கள் காணப்படும். இதனைக் கொண்டு எந்த வகையான நுண்ணுயிர் தொற்றியுள்ளதென்று தெரிந்து கொள்ளலாம்.

✣ **பேத நிர்ணயம்:- (Differential Diagnosis.)**

மலேரியா நோயை வேறு நோய்களில் இருந்து வேறுபடுத்தி அறிதல்.

7, 10, 12 நாட்கள் காச்சல் காணப்பட்டால் நியூமோனியா சுரம். ஒரே நாளில் காலையில் காச்சல் காணப்படும். மறுபடி மாலையில் காச்சல் காணப்படும். காலையில் இருந்த காச்சலைவிட மாலையில் காச்சல் கூடுதலாக காணப்படின் அதிசாரசுரம். (Typhoid Fever) ஆகும். சாதாரண குளிர் சுரம், சிறுநீரகத் தொற்றினால் (urinarytract infection) ஏற்படுத் சுரம் ஆகியவற்றில் இருந்து மலேரியாத் சுரத்தின் இலட்சணங்களை வேறுபடுத்தி இனங்காணல் வேண்டும்.

❁ **மலேரியாவிற்கான சிகிச்சை முறைகள்:-**

✣ நோய் ஏற்பட்டவர் படுக்கையில் ஓய்வாக இருக்க வேண்டும்.

✣ காச்சல், தலையிடி இருந்தால் அவற்றை தணிப்பதற்கு மருந்துகள் கொடுக்க வேண்டும். (சீதாராமவடி, சுரசங்கவடி,

நீலவேம்புக் குடிநீர் போன்ற சித்த ஆயுள்வேத மருந்துகள்)

- நுண்ணுயிர்களை அழிப்பதற்கு மருந்துகள் கொடுக்க வேண்டும். (மருந்துகள் கீழே தரப்பட்டுள்ளது)

- மலேரியாவிற்கான (விஷமசுரத்திற்கான சித்த ஆயுள் வேத மருந்துகள்.

**1. குடிநீர்**

திருவண்ணாமலையில் ரமணமகாரிஷிகள் இருந்த காலத்தில் உபயோகப்படுத்திவந்தார் கடுக்காய்த்தோல், வசம்பு, காசுக்கட்டி, இம் மூன்றும் 1.5 கிராம், பேய்ப்புடோல், சீந்தில்கொடி, நிலவேம்பு, மல்லி, மிளகறனை வேர்ப்பட்டை, ஆடாதோடைஇலை, கோரைக்கிழங்கு இவ்வளுமும் 5 கிராம். மொத்தம் பத்துச் சரக்குகளையும் எடுத்து ஒருமண்சட்டியில் போட்டு ஒரு போத்தல் நீர் விட்டு சிறு தீயாக எரித்து $^1/_4$ போத்தலாக வற்றக்காச்சி தீயை அணைத்து சூடு ஆறாமல் அடுப்பில் வைத்துக் கொண்டு காலை ஒரு அவுன்ஸ், மாலை ஒரு அவுன்ஸ் வீதம் எடுத்து மூன்று நாட்கள் உணவின் முன்பு குடிக்க வேண்டும்.

அடுத்த 4ம் நாள் புதிதாக மேற்கூறியபடி குடிநீர் தயாரித்து காலை, மாலை ஒரு அவுன்ஸ் வீதம் எடுத்து 3 நாட்கள் குடிக்கவும். அடுத்த 15ம் நாள் புதிதாக தயாரித்து மேற்கூறியவாறு 3 நாட்கள் குடிக்கவும் பின்பு 21ம் நாள் புதிதாக குடிநீர் தயாரித்து 3 நாட்கள் காலை, மாலை ஒரு அவுன்ஸ் வீதம் உணவின் முன்பு குடிக்க மலேரியா சுரம் குணமாகும்.

**2. சிறுகாஞ்சோன்றியாதிகஷாயம் :- (அகஸ்தியர் 2000 முதற்பாகம்,**

பக்கம் 94)

| | |
|---|---|
| சிறு காஞ்சோண்டி வேர் | பாவட்டை |
| சிறு கத்தரிவேர் | நன்னாரிவேர் |
| சாறடைவேர் | சுக்கு |
| கண்டங்கத்தரி வேர் | காய்வேளை வேர் |
| சீந்தல்கொடி வேர் | பற்படாகம். |

இவைகளை வகைக்கு ஒரு களஞ்சு வீதம் எடுத்து இடித்து, தண்ணீர் 2 படி விட்டு, ஒருஉழக்காக வரும்வரை வற்ற வைத்து உட்கொள்ள மலேரியா தீரும்.
அளவு :- ஒரு அவுன்ஸ் வீதம் காலை, மாலை உணவின்முன்பு.

## ✣ படோலாதி கசாயம்

பேய்ப்புடோல், கோரைக்கிழங்கு, பற்பகோடகம், சீந்தில் கொடி, குப்பைமேனி, இவைகளை வகைக்கு ஒருவராக னெடைவதம் எடுத்து 8 மடங்கு சுத்த யலம் விட்டு $^1/_8$ ஆக வற்ற விட்டு எடுத்து வடித்து தேனும் சேர்த்து கொடுக்கலாம்.

## ✣ கண்டங்கத்தரி கசாயம்

கட்டங்கத்தரிவேர், பேய்ப்புடோல், சீந்தில்கொடி வெப்பாலைஅரிசி, விழாஅரிசி, கோரைக் கிழங்கு, பற்படாகம், சுக்கு, சிறுகாஞ்சோன்றி, நீலவேம்பு இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு சுத்த நீர் எட்டு மடங்கு விட்டு அடுப்பில் வைத்து எரித்து $^1/_8$ பங்காக வந்ததும் வடித்து குடிக்க விஷம சுரம் தீரும்.

✣ **பேராமட்டிக் கசாயம்:-**

பேராமட்டி வேர், சுக்கு, இவ்விரண்டையும் வகைக்கு $^1/_2$ பலம் எடுத்து இடித்து சூரணம் செய்து 8 மடங்கு நீர் விட்டு அடுப்பில் வைத்து எரித்து $^1/_8$ ஆக வற்றியபின் வடித்துக் கொடுக்க குளிர் சுரம், விசமசுரத்தில் ஏற்படுகின்ற மூட்டுவலி, நாவறட்சி, உதறல் முதலியவை உடனே தீரும்.

✣ **தசமூலாதி கசாயம்:-** முறைப்படி செய்து கொடுக்க விஷமசுரம் தீரும்.

கொத்தமல்லியாதி கசாயம் : கொத்தமல்லி விதை 2 களஞ்சு, சுக்கு ஒரு களஞ்சு, நாரைத்தேயிலை ஒரு களஞ்சு, இவைகளை இடித்து சுத்தமான நீர் 2 நாளி விட்டு அடுபபில் எரித்து, $^1/_4$ வற்றிய பின் வடிகட்டி காலை, மாலை ஒரு அவுன்ஸ் கொடுக்க விசமசுரம் தீரும்.

✣ **வாஸாதி கசாயம் :-**

ஆடாதோடை, பேன்புடோல், சீந்தில் கொடி பற்படாகம், கண்டங்கத்தரி வேர், நிலைவேம்பு, சக்ல இவைகளை சமமாக ஒரு களஞ்சு அளவு எடுத்து இடித்து ஒருபாத்திரத்திலிட்டு சுத்தமான நீர் விட்டு அடுப்பில் எரித்து $^1/_8$ ஆக வற்றிய பின் தேன் கூட்டிக் கொடுக்க விசேடமாக விசமசுரம் தீரும்.

❀ **சூரணங்கள் :-**

✣ இலகு சுதர்சன சூரனம் அல்லது சுதர்சனசூரனம்.

| | | |
|---|---|---|
| சீந்தில் கொடி. பலம் | - | 2 |
| சுக்குபலம் | - | 2 |
| திப்பிலி மூலம் பலம் | - | 2 |
| கராம்பு பலம் | - | 2 |
| திற்பலி பலம் | - | 2 |
| வேப்பம்பட்டை பலம் | - | 2 |
| கடுகுறோகினிபலம் | - | 2 |
| சந்தனத்தூள் பலம் | - | 2 |
| கடுக்காய் பலம் | - | 2 |
| நிலவேம்பு பலம் | - | 18 |

மேலே கூறப்பட்ட 10 சரக்குகளையும் தனித்தனியே இடித்து முடிவில் ஒன்றாகக் கலந்து எடுபபது. தினம் காலை, மாலை ஒரு தேக்கரண்டி சுட்டாறிய நீருடன் கொடுக்கவும். 20 நாட்களுக்கு கொடுத்தால் விசம சுரத்துடன் எல்லாவகையான சுரமும் தீரும்.

✣ **மகாசுதர்சன சூறனம் :-**

பிரயோகம் காலை, மாலை ஒரு தேக்கரண்டியளவு உணவின் முன்பு வெந்நீருடன் உட்கொள்ளவும். 20 அல்லது 40 நாட்களுக்கு உட்கொண்டால் எவ்வித சுரமும் திரும்ப வராது. என்றுகூட் கூறலாம்.

குறிப்பு :-

மேலே கூறப்பட்ட சுதர்சன சூறணங்கள் இரண்டையும்சுரம் விட்டபின்பு சாப்பிடுவது. நன்று சுரமிருக்கும் போது சுரசங்கவடி நிம்பா அரிஷ்டம், விஷ்ணு சக்கர மாத்திரை போன்ற

ஏதேனுமொன்றை உட்கொண்டு சுரம் விட்டபின் சுதர்சன சூறணத்தைப் பாவிக்கலாம். நிம்பாதி சூறணம்- காலை, மாலை, 1 தேக்கரண்டி வீதம் 10 நாளில் உணவிற்கு முன்பு உட்கொள்ளலாம்.

## ✸ மாத்திரைகள் :-

1) **ஆனந்தபைரவ மாத்திரை:-**

சுக்கு, மிளகு, திற்பலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், மாசிக்காய், வெண்காரம், லிங்கம், கந்தகம், வெண்நாபி.

செய்பாகம் :-

மேலே கூறிய சரக்குகளை சம அளவாக எடுத்து சூரணித்து பல்வத்திலிட்டு மூன்று நாள் எலும்பிச்சபழ சாற்றில் அரைத்து மிளகளவு மாத்திரையாக உருட்டி வெயிலில் உலர்த்தவும்.

பிரயோகம் :-

தும்பைப்பூரசம், தேன், இஞ்சிச்சாறு, முலைப்பால், இவைகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்க சர்வசுரங்களுடன் விசேடமாக விசமசுரம் தரும்.

அளவு:-

குழந்தை பிறந்து முதல் மூன்று மாதம்வரை 1/4 மாத்திரை,
3மாதம் தொடக்கம் 6 மாதம் வரை 1/2 மாத்திரை,
6 மாதம் தொடக்கம் 1 வயதுவரை ஒரு மாத்திரை,
பெரியவர்களுக்கு 2 மாத்திரை கொடுக்கலாம்.

பத்தியம் :-

பால் உண்ணும் குழந்தைகளாயின் தாய் புளிநீக்கி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

2. சின்னச் சிவப்புக் குளிகை :-

இஞ்சிச்சாறு, தேன், முலைப்பாலில் ஏதாவது ஒன்றுடனோ அல்லாது சேர்த்தோ காலை, மாலை கொடுக்கலாம். அல்லாது சேர்த்தோ காலை, மாலை கொடுக்கலாம்.

3. மகாகோரோசனை மாத்திரை :-

இஞ்சிச்சாறு , தேன், முலைப்பாலில் கொடுக்கலாம்.

4. பெரிய சிகப்புக் குளிகை.

5. மகாசுராங்குசம்.

6. தேற்றாங்கொட்டைக்குளிகை.

7. மகாஏலாதிமாத்திரை.

8. விஷ்ணுசக்கரமாத்திரை.

9. சீதாராமவடி

10. சுரசங்கவடி

மேற்கூறப்பட்ட மாத்திரைகளில் ஏதாவது ஒன்றை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், போன்றவற்றில் ஏதாவது ஒன்றுடனோ அல்லது சோத்தோ அனுபானமாகக் கொடுக்க விஷம சுரத்துடன் சகல சுரமும் நீங்கும்.

❖ அரிஷ்டம்:-

1. நிம்பா அரிஸ்டம் :-

காலை, மாலை ஒரு மேசைக்கரண்டி வீதம் உணவின் முன்பு கொடுக்கவும்.

✣ **குவாதம் -**

மகாசுதர்சன குவாதம்.

✣ **செந்தூரங்கள்.**

1. ரசசெந்தூரம்
2. லிங்க செந்தூரம்.

✣ **ரசம்**

1. நீலகண்ட ரசம்
2. இராமபானரசம்.

✣ **பற்பம் :-**

வீரபற்பம் :-

✣ மலேரியா மீண்டும் மீண்டும் வராமல் இருப்பதற்கு துளசி, மிளகு, வேப்பம் பட்டை, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு போன்றவற்றைச் சேர்த்து இடித்து குடிநீர் செய்து வாரம் ஒரு முறை குடிக்கவும்.

கசாயம் செய்தும் வாரம் ஒரு முறை குடிக்கவும்.

✣ குறிப்பு :-

மருந்துகளின் அளவுகள் நோயாளியின் வயதையும் நோயின் தன்மையையும் பொறுத்து மருத்துவர்கள் தீர்மானிக்க

வேண்டும்.

மேலே கூறப்பட்ட அனைத்து மருந்துப் பொருட்களும் தகுந்த முறையில் சுத்தம் செய்யப்பட்ட பின்னலே மருந்தில் சேர்க்கவேண்டும்.

✣ மலேரியா நோயாளிக்கு கொடுக்க வேண்டிய உணவு முறைகள்.

அனேகமாக திரவ உணவுகள் கொடுக்க வேண்டும். நெற்பொரி, சுட்டாறிய நீர், தேசிப்பழச்சாறு, தோடம்பழச்சாறு, பழச்சோடா, குளுக்கோஸ், உப்புச் சேர்ந்த பிஸ்கற் (கிறீம்கிறாக்கர்) போன்றவையும், பால்மா வகைகளும் குடிக்கக் கொடுக்க வேண்டும். அத்துடன் இலகுவில் சமீபாடடையக்கூடிய மென்மையான உணவுகளும் கொடுக்கலாம். உடலை போஷாக்காக வைத்திருக்கக்கூடிய உணவு வகைகள் நன்று.

✣ **சுரம் விட்டதற்கான இலட்சணங்கள் :-**

எப்பதார்த்த்திலும் அதிக விருப்பம். சரீர எரிவு களைப்பு, அங்கங்களில் வேதனை, மனச்சஞ்சலம், இவைகள் இல்லாமல் இருக்கும். வியர்வை தும்மல் காணப்படும். பசியுடன் உணவில் விருப்பம் ஏற்படும்.

✣ **மலேரியா பரவும் முறைகள்:-**

சனத்தொகை, போர்ச்சூழல், இடப்பெயர்வுகள், பூச்சிக்கொல்லிகள் உரிய முறையில் தெளிக்கப்படாமை. மலேரியா காவியான அனோபிலிஸ் பெண் நுளம்புகள் பெருகக் கூடிய முறையின் வீடுகளில் மற்றும் பொது இடங்களிலும்

நீர்த்தேக்கங்கள் காணப்படுதல். சிரட்டைகளில், இளநீர் கோம்பைகள், ரயர்களில், சிறிய இடங்களில் நீர்தேங்கிக் காணப்படல்.

**✣ மலேரியா நோய் ஏற்படாமல் தடுக்கும் முறைகள்:-**

வீட்டையும், பொது இடங்களையும், நாட்டையும், உலகத்தையும் சுகாதாரமான முறையில் வைத்திருத்தல். சிரட்டைகள், கோம்பைகள், ரயர்கள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றில் நீர் தேங்கி நிக்காதவாறு அவற்றை அழித்துவிடுதல். நீர்தேங்கி நிற்கும் சிறுசிறு குட்டைகளை மூடக்கூடியவற்றை மூடிவிடுதல். பெரிய நீர்த்தேக்கங்களில் மீன்கள் வளர்த்தல் போன்றவற்றின் மூலம் நோய்க் காவியாகிய நுளம்பை இல்லாது ஒழித்து விடலாம்.

நுளம்பு குத்துவதிலிருந்து உடலைப்பாதுகாப்பதற்காக நித்திரை செய்யும் போது நுளம்பு வலை, சீலைகள் போன்றவற்றால் மூடிக்கட்டுதல். சரியான முறையில் கிருமி நாசினி பூசப்பட்ட நுளம்பு வலை நன்று.

புகையூட்டல், நுளம்புத்திரி பாவித்தல் மூலம் நுளம்புக்கடியிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். மலேரியா நோயுள்ள இடங்களில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள் மலேரியா நோய் ஏற்படாமல் இருப்பதற்காக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மலேரியா நோய் இல்லாத இடத்திலிருந்து தற்காலிகமாக நோய் உள்ள இடத்திற்கு போவதாயின் முறையான வைத்திய ஆலோசனையுடன் நோய்த்தடுப்பு சிகிச்சையை பெற்றுக்கொண்டு போதல் வேண்டும். பொது நிறுவனங்கள் ஊடாக மலேரியா நோய் வராமல் தடுக்கும் முறைகள் பற்றி

கலந்துரையாடல்கள் நடத்தப்படுதல் வேண்டும். உங்களுக்கு தெரிந்த ஒவ்வொருவருக்கும் மேலே கூறப்பட்ட விடயங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் உங்கள் பிரதேசத்தில், ஊரில், கிராமத்தில், நகரத்தில், நாட்டில், ஏன் உலகத்தில் கூட மலேரியா நோய் ஏற்படாமல் முடியுமான வரையில் தடுத்துக்கொள்வதன் மூலம் மக்களை காப்பாற்றலாம்.

முக்கிய குறிப்பு:-

நாம் ஒருவர் இருவர் சேர்ந்து மலேரியா காவியான அனோபிலிஸ் பெண் நுளம்புகளை அழிக்க முடியாது. நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம்தான் அனோபிலிஸ் பெண்நுளம்புகளை அழித்து விரட்டி எமது மக்களை கொடிய மலேரியா நோயிலிருந்தும், அழிவிலிருந்தும் காப்பாற்றி ஆரோக்கிய பிரஜைகளாக வாழ வழிவகுக்கலாம். எல்லாம் எங்களின் கைகளிலேதான் உள்ளது.

பொன்மொழி :-

**"வந்தபின் காப்பதிலும் விட வரமுன் காப்பதே சிறந்தது"**

[illegible]

13/01/03

[illegible]

13/01/03

[illegible]

13/01/03

# மலேரியா நோயும்,

## அதற்கான சிகிச்சைகளும்



அஞ்சலா கிளினிக் - முழங்காவில்